# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

10-4-66

விலை 20 காசு



ஹெரால்டு வில்சன்

## உலக அரங்கில்

இராணுவத்தை மையமாக வைத்து துவங்கப்பட்ட பாகிஸ்தான் உறவு, முறிந்துவிழ இருப்பதைக் காண இப்போது டல்லஸ் உயிருடன் இல்லையே என்று வருத்தப்படுகிறார்கள் அப்போதே இக்கொள்கைக்கு உடன்பாட்டைத் தெரிவிக்காத அமெரிக்கர்களும், அரசியல்வாதிகளும்!

2,000,000,000 டாலர்களுக்கு மேல் மதிப்புள்ள தளங்களை உருவாக்கிவிட்டு, விமானங்களை வழங்கிவிட்டு, டாங்குகளைத் தந்துவிட்டு, கப்பல்களைக் கொடுத்துவிட்டு இவைகளையெல்லாம் எப்படி இயக்குவதுஎன்பதற்காகப்பயிற்சிபெற்ற அமெரிக்கர்களையும் அனுப்பி வைத்த வாஷிங்டன் அரசியல் தலைவர்கள் பாகிஸ்தானத்திலிருந்து அண்மையில் வெளிவந்திருக்கும் செய்தியைக் கேட்டு நீறுபூத்த நெருப்பை மிதித்தவர்களைப்போல நேர்முகமாக இல்லையெனினும் மறைமுகமாக பதைபதைத்திருக்க வேண்டும்.

பீகிங், பாகிஸ்தானத்துக்கு 50 மிக். 19 வகை விமானங்களையும் 'U-58' வகை டாங்குகள் 50ம் உதவியாக வழங்கியுள்ளது. இதில் மிக் விமானங்கள் இரஷ்யாவின் மிக் விமானங்களைவிட அதிகமான முன்னேற்றங்களைக் கொண்டவையாம். இவைகள் நிறுத்தப்பட்டிருக்கும்தளங்களில் ஏற்கனவே பாகிஸ்தானத்தில் இருக்கும் அமெரிக்க வீரர்களோ அல்லதுவேறு எந்த மேற்கத்திய பார்வையாளர்களோ அனுமதிக்கப்படுவதில்லையாம்!

இத்தகைய சீனத்துச் சீதனங்களைக் கடந்த திங்கள் 23-ந்தேதியன்றுநடந்த இராணுவ அணிவகுப்பு ஒன்றில் இடமபெறவைத்து அதிபர் அயூப்கான் "காஷ்மீர் பிரச்சினை முடிவுபெருத வரையில் பாகிஸ்தானம் தனது இராணுவ பலததை அதிகபபடுததுவதினின்றும் பின்வாங்காது" எனறு பேசியுள்ளார்.

நேர்மையற்ற முறையில் பாகிஸ்தான் அவ்வப்போது இராணுவத் தாக்குதல்கள், ஊடுருவல்கள முதலியனவற்றைக கடந்த சில காலங்களில் நடததியபோது கூட வெளிப்படையாககணடித்து ஒருவார்த்தை பேசாமல "போக கிரிப் பிள்ளை" என அன்போடு தட்டிக்கொடுத்துப் பூரித்துப்போன சில அமெரிக்கத் தலைவர்கள், இப்போது வந்திருக்கும் பாகிஸ்தானத்துச் செய்தியை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறுகிறார்கள்.

ராவல்பிண்டியில் நடந்த சீன டாங்கிகள் அணிவகுப்பு இரண்டு காரணங்களை யொட்டி கடந்த 23-ந் தேதி நடத்தப்பட்டுள்ளது.

# எச்சரிக்கை?

1. இந்திராவின் அமெரிக்கப் பயணம்

2. இரஷ்யாவில் நடந்த 23-வது கட்சி மாநாடு

பிறர் நிழலில் வெயிலுக்கு மறையும் இராஜதந்திரத்தைபபயன் படுத்தியிருக்கிறது பீகிங். பாகிஸ்தானைப் பயன்படுத்தி வாஷிங்டனுக்கும் மாஸ்கோவுக்கும் அறைகூவல் விடுத்திருக்கிறது சீனு.

'இந்திராவின் பயணத்தை ஒட்டி எந்தவித இராணுவ உதவியையும் அமெரிக்கா இந்தியாவுக்கு அளிக்கக்கூடும்; அல்லது உறவிலாவது இன்னும் நெருக்கம் தோன்றும்' என்று காரணம் காட்டி பாகிஸ்தானததைத் தன்பக்கம்மட்டுமல்ல; தனது தயவை எதிர்பார்க்கும் ஒரு நாடாக மாற்றத் துணிந்துள்ளது மக்கள் சீனம்.

அதேபோது, டாஷ்கண்ட் பிரகடனத்தினுல் ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் மத்தியில் 'செல்வாக்கு பெற்ற நாடு' என்ற அளவில் இருக்கும் சோவியத் யூனியனுக்கு "இப்போது என்ன சொல்கிருய்" என பாகிஸ்தானின்தோள்மீதுகையைப் போட்டுக்கொண்டு வினவுகிறது சீனு. குறிப்பாகஇரஷ்யாவில் நடந்த 23-வது கட்சி மாநாடு சமயத்தில் 'பிளவுவாதி' என்றபெயரிட்டுத் தனனை மற்றைய கம்யூனிஸ்ட் நாடுகளின்கருத்திலிருந்துமறைக்க முயலும மாஸ்கோவின் முயற்சியைப் பினனணிக்குத் தள்ளி அதைவிட முக்கியத்துவம் வாய்ந்த செயதியை உலகுககுத் தரவிரும்பிய சீனு தனது டாங்குகளையும் விமானஙகளையும் விமானங்களையும் ராவலபிணடிக்கு அனுப்பியதோடல்லாமல் தனது தலைவா லியுஷே-சி, வெளிவிவகார அமைச்சர் சென-யி இருவரையும் அனுப்பி "வாழ்வென்ருலும் தாழ்வென்ருலும் சீனுவின் 60 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாகிஸ்தானின் பக்கமிருப்பார்கள்" என்று உறுதிமொழியையும் தெரிவிக்க வைத்துள்ளது.

டாஷ்கண்ட் ஒப்பந்தத்துக்கு எடுத்த முயற்சிகள் வீண்; அதையொட்டித் தனக்குக் கிடைத்தபெருமைகள் தற்காலிகமே என்ற அளவில் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளது இரஷ்யா. ஆசிய அரசியலில் சீனு எவ்வளவு செல்வாக்குப் பெறுகிறதென்பதோ அல்லது இரஷ்யா பெற்றிருக்கும் செல்வாக்கைக் குறைக்க முயற்சிக்கிறதென்பதோ கம்யூனிச குடும்பத்து விவகாரம்.

'நம்பி ஏமாந்தநாடு' என்ற அடிப்படையில் அமெரிக்காவின் ஏமாற்றம்தான் இங்கு மிக அதிகம். 'நேட்டோ' நிலைகுலைந்து வந்துகொண்டிருக்கும் தருணத்திலேயே பாகிஸ்தான் - சீனு நெருக்கம் 'சீட்டோ' 'செண்ட்டோ' ஒப்பந்தங்களுக்கும் உலைவைக்கிறதே எனறு அவதிப்படவேண்டியதுஅமெரிக்காதான்.

இந்தியாவைத்தன்பக்கம் இழுக்க பாகிஸ்தானைப் பகடைக் காயாகப் பயன்படுத்த வேண்டுமென்ற அமெரிக்க அரசியல்வாதிகள் தஙகள் தளவாடங்களுக்கு மததியில் பிறவி எதிரியான சீனுவின் தளவாடங்கள் வந்துள்ள செய்தியைப் படித்துவிட்டு அங்குசென்ற இந்திராவிடம் முகம் கொடுத்துப் பேசுவதற்குச் சிறிதேனும் வெட்கப்பட்டிருப்பார்கள்.

டல்லஸ் இந்தியாமீது கொண்டிருந்த வெறுப்பின் விளைவாக எழுந்த அமெரிக்கா-பாகிஸ்தான் இராணுவ உறவுகளைத் தீவிரமாக மறுபரிசீலனை செய்துகொள்ள வாஷிஙடன் தலைவர்கள் இம்முறையும் தவறுவார்களானுல் அது ஆசிய அரசியலில் அவர்களுக்கு இரணடாவது கெட்ட பெயர் ஒனறைப் பெற்றுத்தரும என்பதில் சந்தேகம் இல்லை.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் ஒன்றினுலேயே இந்தியா-பாகிஸ்தான வேறறுமை மடிநதுவிடும் என்று திருபதியுணர்வு கொண்டுவிட வேணடாம்

(16-ம் பக்கம் பார்க்க)

# காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10    ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 2    10—4—66    இதழ் 37


## பெருவெற்றி!

மிகக் குறைந்த பெரும்பான்மையுடன், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஒவ்வொருநாளும், ஒவ்வொரு பிரச்னையின்மீதும், செத்து செத்துப் பிழைத்து வந்த இங்கிலாந்து நாட்டின் தொழிற்கட்சித் தலைவர் கடந்த கிழமை நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில், மிகப் பெரும்பான்மையான மெஜாரிட்டி பலம் பெற்று, தன் சீரியசில கொள்கைகளையும், திட்டங்களையும் செயல்படுத்துவதில் மக்கள் சம்மதம் பெற்றுவிட்டார் என்று அரசியல் பார்வையாளர் விமர்சிக்கத்தக்க அளவு சிறப்புக்குரியவரானார் ஹெரால்டு வில்சன்.

தேர்தலின் மூலமே பதவி இழந்த வில்சன், பனிரெண்டு ஆண்டுக்கால போராட்டங்களுக்குப் பின்னர் 1964-ல் மிகக் குறைந்த பெரும்பான்மையில், தன் கட்சியை வெற்றிமுனையில் கண்டாலும், பழைமையாளர் கட்சி எனப்படும் கன்சர்வேட்டிவ்களின் இடையருத தொல்லைகள் பலவற்றின் காரணமாகவும், அண்மையில் ரொடீஷியா தன்னிச்சையாகச் சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டு, இவான்ஸ்மித் ஆட்சிப் பொறுப்பேற்றதனாலும், உள்நாட்டுப் பொருளாதார செலாவணி நிலைமைகள் சில சீர்கேடுற்றதனாலும் அவர் ஆட்சி அடிக்கடி ஆட்டங்காண நேர்ந்தது.

ஆட்சி அரசியல் அபாயத்தைக் கடந்துவிட்டார் வில்சன். என்றாலும், ரொடீஷிய விவகாரத்தில் இனி அவர் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? வெளி விவகார புனராலோசனைகள் யாவை? — என்பன போன்றவற்றிற்கு விடை கிடைக்கும்போதுதான் பயமற்ற பெரும்பான்மையை நல்கிய இங்கிலாந்து மக்களுக்கு அவரது நன்றிக் கடன் புலப்பட முடியும்.

'ரொடீஷியா' விவகாரத் தீர்வு என்ற தலைவலி— அதுவும் ஒற்றைத் தலைவலியைத் தீர்க்க, வெளிநாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவித யோசனைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

பெருமிதத்துடன் அந்தயோசனைகளைச் செவிமடுத்துக் கொண்டு வரும் வில்சன், அதே பெருமிதத்துடன் ஸ்மித்தின்மீது உடனடியான நடவடிக்கைக்குக் காலங்கடத்திக்கொண்டு வந்திருக்கிறார். காரணம், ஸ்மித்தும்கூட வெள்ளை இனம் என்பதால் எனக் கூறப்பட்டது.

ஆனால், ரொடீஷியாவில் சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டுள்ள ஸ்மித், இப்போது 'குடியரசு நாடு' எனவும் பிரகடனப்படுத்திவிடப்போவதாக பயமுறுத்திக்கொண்டிருக்கிறார். இதற்கு இவர் கூறுகின்ற காரணங்கள்,

> பேச்சுவார்த்தைகள் மூலம் இனி ரொடீஷிய விவகாரம்பற்றிப் பேசுவதற்கில்லை. காலங்கடத்தியதன் மூலம் வில்சன், இதற்கான வாயிலை அடைத்துவிட்டார்

என்று அறிவிப்பதுடன், இந்த விவகாரத்தில், தேவையே இல்லாமல் எலிசபெத் அரசியாரின் பெயர் வீணாக இழுக்கப்படுகிறது என்றும் கூறுகிறார்.

இந்த வார்த்தையைமட்டும்வைத்து ஆராய்ந்தால், ரொடீஷியா விவகாரம், நீண்ட நெடும் பகைமையைப் பிரதிபலிக்கப்போகிறது என்று சட்டென்று சொல்லிவிட முடியும்; இங்கிலாந்து—ரொடீஷியா ஆகிய இரு நாடுகளிலும் ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் ஒரே இனத்தவர் என்பது இக்கருத்துக்கு ஆதரவளிப்பதாய் அமையக்கூடும்.

இந்நிலையில்தான் மிகப்பெரும்பான்மை பெற்றிருக்கிறார்வில்சன்; மிகப்பெரிய வெற்றி அவரது கட்சிக்கு என்றால், ரொடீஷிய விவகாரத்தில் இங்கிலாந்து நாட்டு மக்களின் பொதுக்கருத்தும் கண்ணோட்டமும் வெளிப்படையாகவே தெரிகிறது.

ஆழ்ந்தகழ்ந்து, துருவித் துருவி ஆராய்ந்தால், இந்த வெள்ளையான 'கருத்தும்', 'ஆதரவும்'—ஒரு இன மக்களின்மீது அநியாயமாக அரசியல் நிர்ப்பந்தம் திணிக்கப்படுவதற்கன்றி, சுதந்திர ஜனநாயக உரிமைகளும் நசுக்கப்படக்கூடும் என்பதற்கான எடுத்துக்காட்டுதான் ஸ்மித்தின் அறிவிப்பு.

ரொடீஷிய கொள்கையின்மீது 'ஒருவித' பரிகாரம் காணவும், 'படைபலக் குறைப்பு' என்பதன் பேராலும் ஆனால், தேர்தல் சூழ்நிலைகளை இதயத்தில் நிரப்பிக் கொண்டு, அச்சூழ்நிலைக்குச் சில பொது விளம்பரங்கள் பெற, இரு திங்களுக்குமுன் பிரதமர் வில்சன் ரஷ்யாசென்றிருந்தபோது 'யாரோ, இவர்யாரோ' என்ற வகையில் வரவேற்கப்பட்டார். வெளிப்படையாகவே இவரது கருத்துக்களும், யோசனைகளும் மறுக்கப்பட்டன, அங்கு.

இதிலிருந்து, ரொடீஷிய விவகாரத்தில் வெளியுலகம் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதை வில்சன் நன்கு புரிந்துகொண்டிருப்பார்.

என்றாலும், இனி இவர் இது போன்றதொரு கண்ணோட்டத்தில் ரஷ்யாவின் பார்வையில் இருக்கமாட்டார் என்பதும், ரஷ்யாவாலும் அத்தகைய அலட்சியக் கண்ணோட்டம் செலுத்த முடியாது என்பதும் அரசியல் தீர்ப்பு.

ஆயினும், பெருவாரியான வெற்றி மூலம், மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டுவிட்ட வில்சன், பெருவாரியான நாடுகளின் நம்பிக்கையையும் பெறத் தவறமாட்டார் என்பதற்கான அறிகுறிகளும் அரும்பியிருக்கின்றன.

எது எப்படி இருந்தாலும், எத்தகைய மாற்றங்கள், திடீர்திருப்பங்கள் தோன்றினாலும் பிறநாடுகளின் கருத்திற்குமுரண்பாடாகப் போகவும் ஜனநாயகப்பாரம்பரியங்களுக்கு உலைவைக்கத் துணைபோகவும் வில்சன் தயாராக இருக்கமாட்டார் என்பது பொது நம்பிக்கைக்குரியதாகும் என்ற கருத்துடனேயே அவர் படத்தை முகப்பில் வெளியிட்டிருக்கிறோம்.

இதேநம்பிக்கையுடன், வில்சனின் இந்த மாபெரும் வெற்றியை வரவேற்கும் நேரத்தில் இந்த வெற்றி இந்திய—இங்கிலாந்தின் நெருக்கமான நேச உறவுக்கு இன்னும் ஆழமான அளவுக்கு வழி கோலவேண்டும்; உதவி செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம்.

## வட எல்லை—ஒரு சுவையான ஆராய்ச்சி!



# இமய எல்லை

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்

வாழ்க்கை, வாழ்வதற்கே என்று கருதி வாழ்ந்தவர்கள் பண்டைத் தமிழர்கள். ஆனால், அவர்கள் இன்பம் மட்டுமே குறிக்கொண்டு, சோம்பி வாழவில்லை; பொருள் ஈட்டுவதிலும் சலியாது உழைத்தனர். திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவதில் அவர்கள் என்றும் தயங்கியவர்கள் அல்லர். அதே சமயம் இன்பத்தையும், பொருளையும் அவர்கள் தகாத வழியில் பெற விரும்பவில்லை. அறவழி நின்று ஈட்டினர். அறவழி நின்று இன்பம் துய்த்தனர். வாழ்ந்தால் புகழுடன் வாழவேண்டும் என்று கருதினர். மானம்காத்து, தன்மதிப்புக்கு இழுக்கு வந்தால் சாதலையே விரும்பினர். உயிரை வெல்லமாகக் கருதிக் கோழைகளாக வாழ்ந்தவர்களல்லர் தமிழர்.

உலகின் வீர இனங்களிலே, வீர இனமாகத் திகழ்ந்தவர் தமிழர். இந்தியாவிலே இரசபுத்திரரின் வீர காதைகளைப் படிக்கிறோம்; மராட்டியரின் வீர வரலாற்றில் நாம் ஈடுபடுகிறோம்; அவற்றின் மூல இலக்கணத்தை நாம் புறநானூற்றில் காணலாம். பதிற்றுப்பத்தில், சேர அரசர்களின் போர்க் காவியங்கள் திரைப்படச் சுருள்போல் பத்துப் பத்தாக, நம் கண்முன் அடுக்கடுக்காக ஓடுகின்றன. களவழி நாற்பதில், போரிலேயே திளைத்தசோழப் பெருமன்னன் செங்கணனின் செங்குருதிப் போராட்டங்களில் திளைக்கிறோம். கலிங்கத்துப் பரணியில் தமிழரின் வீரம் கோதாவரி ஆறு தாண்டி, மகாநதியின் இரு கரைகளிலும் போர்முரசு கொட்டிய செய்தி அறிகிறோம்.

ஆனால், தமிழர் வீரத்தின் சிற்றெல்லைதான் காவிரியும், கோதாவரியும். அதன் பேரெல்லை இமயமாகவே காட்சியளிக்கிறது.

தமிழகத்தின் தென் எல்லை குமரி. ஆனால், குமரியில் எந்தத் தமிழரசரும் சென்று தமிழ்க்கொடி நாட்டியதில்லை. தமிழகத்தின் வட எல்லை வேங்கடம். அங்கும் எவரும் தமிழ்க் கொடி நாட்ட எண்ணியதில்லை. கலிங்கம் வென்றுண்ட சோழர்கள், கலிங்கத்தில் தாங்கள் கொடிகட்டியதாகவிருதுகூறவில்லை. இலங்கையை வென்று ஆண்ட பாண்டியரோ, சோழரோ இலங்கையில் தமிழ்க் கொடி நாட்டியதாகவும் பெருமை கூறிடக்காணோம். ஆனால், இமயத்தில் தமிழ்க்கொடி நாட்டியது பற்றியே சங்ககால அரசர்கள் விருது கூறிக்கொள்கின்றனர் — அதுபற்றியே புலவர் பாடினர். அச்செயல் செய்த அரசனை மட்டுமன்றி, அவன் வழிவழிவந்த அவன் மரபினர்களையும், அச்செயலை நினைவூட்டி, நினைவூட்டிச் சலியாது பாடியுள்ளனர்.

பாண்டியன், இமயத்தில் தன் கயல்கொடி நாட்டினான். அவனுடன் போட்டியிட்டுச் சோழன அதே இமயத்தில் சென்று தன் புலிக்கொடி பொறித்தான். இருவருடனும் மலைத்துநின்ற சேரன் தானும் அதே இடத்தில் சென்று தன் விற்கொடியை ஏற்றிவைத்து மீண்டான்.

குமரிமுனையில், தமிழர்களுக்கு இல்லாத அக்கறை, வேங்கடத்தில், கோதாவரியில் இல்லாத இந்த அக்கறை, இமய எல்லையில் மட்டும் வருவானேன்?

இந்தக் கேள்வியை நம் வரலாற்றாசிரியர்கள் கேட்கவில்லை. அதனால் தான் தமிழரின் இந்த உரத்த புகழ்க் குரல் வெறும் கவிதைப் புனைந்துரையாய் இருக்கக் கூடுமோ என்று ஐயுற்று, அதுபற்றித் தம் வரலாற்றாராய்ச்சிக் கூரொளியை இந்திய வாழ்வின் மீது செலுத்தாமலே சென்றுள்ளனர்.

சேரன் செங்குட்டுவன், வட திசைப் படையெடுப்பைப்பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது. தன் தாயின் நீராட்டுக்காக ஒரு தடவையும், கண்ணகி சிலைக்காக மற்றொரு தடவையும், அவன் வடதிசை படையெடுத்ததாக அது கூறுகிறது. இது காவியக் கண்கொண்டு பார்த்துக் கவிஞன் கூறும் காரணமேயன்றி, வரலாற்றுக் காரணம் ஆகமாட்டாது. ஏனெனில், இதே காப்பியம், கரிகாலன் வடதிசைப் படையெடுப்பைப்பற்றியும் கூறுகிறது. வட திசை மன்னரிடமிருந்து, பட்டி மண்டபமும், முத்துப்பந்தரும்

(14-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

## வெள்ளை மாளிகையில்! (9)

'மனிதன்' என்ற தலைப்பிட்டு இந்த ஏடு எழுதப்பட்டிருப்பதன் நோக்கம் மனிதத் தன்மை இன, மத, குலப்பற்று வெறியாகிடும்போதும், சுகபோகத்தில் நாட்டம், சுய நலத்தில் விருப்பம் எழும்போதும், மாய்க்கப்பட்டுவிடுகிறது; யார், அத்தகைய நிலையிலும் வீழாமல், நிமிர்ந்து நின்று, நேர்மையுடன் யார் நடந்துகொள்கிறார்களோ, 'இதயசுத்தி' யுடன் நடந்துகொள்கிறார்களோ, அவர்களையே 'மனிதன்' என்ற பட்டியலில் சேர்க்க முடியும்; 'மனிதன்' என்ற தகுதியை அவர்களே பெறுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் தூய நோக்கமே காரணமாக அமைந்திருக்கிறது. இந்த ஏட்டின் தனிச் சிறப்புக்கு இதுவே காரணமாகவும் அமைகிறது.

தன்னலம் தலைகாட்டவே செய்யாது என்று கூறிவிடுவதோ, என்னிடம் தன்னல உணர்ச்சி வெற்றிகொள்ளவே செய்யாது என்று இறுமாந்து கூறிடுவதோ பொருளற்றதாகும்.

தன்னலம் என்பதற்கே வடிவங்கள் பலப்பல.


தன்னலத்தை ஊட்டிடும் நிலைகளும் பலப்பல.

தன்னலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான முறைகளும் பலப்பல.

தன்னலத்தைத் துளியும் கருதாதவன் என்றோ, தன்னல நோக்கமே எழாத நிலையினன் என்றோ ஒருவரைப்பற்றிக் கூறி, பெருமைப்படுத்துவதைக் காட்டிலும், உண்மையான பெருமை, தன்னலத்தை வென்றவன்; தன்னல உணர்ச்சியால் தாக்கப்பட்டும் தாழ்ந்துவிட மறுத்தவன்; தன்னல உணர்ச்சியுடன் போரிட்டு வெற்றிகண்டவன் என்பதிலேதான் இருக்கிறது.

தன் வாழ்க்கை, அதிலே குளிர்ச்சி; தன் குடும்பம், அதிலே ஏற்றம்; தன் நிலை, அதிலே பெருமிதம் பெற்றிடவேண்டும் என்ற உணர்ச்சி, கெட்டவர்களுக்கு மட்டுமே தோன்றிடக்கூடியது என்று கூறிவிடுவதும் முற்றிலும் உண்மையாகிவிடாது. இயற்கையாகவே அனைவருக்கும் எழக்கூடிய உணர்ச்சியே அது.

அவ்விதமான உணர்ச்சியே இல்லை, கற்சிலைபோன்ற உறுதி இவருக்கு என்று பெருமைப்படுத்தக் கூறிடலாம்; அது கேட்டுச் சிலர் பெருமகிழ்ச்சியும் கொண்டிடலாம். ஆனால் உண்மையான பெருமை, தன்னல உணர்ச்சி எழவே எழாது என்ற நிலையில் இல்லை; தன்னல உணர்ச்சி எழுகிறது; எதைச் செய்தாகிலும், எவரைக் கெடுத்தாகிலும், நேர்மையை மறந்தாகிலும் தன்னலத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கருதிவிடாமல், தன்னல உணர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பொது நன்மைக்காக விட்டுக்கொடுக்கவும், நீதியாக நடப்பதன் மூலம் தன்னலம் பெற்றிட முடியாது என்ற நிலை ஏற்படின் நீதி பெரிது, தன்னலம் அல்ல என்ற உறுதிகொள்வதும், அதன்படி ஒழுகி இன்னலை இன்முகத்துடன் ஏற்றுக்கொள்வதுமாகிய நிலைமை இருக்கிறதே, அதிலேதான் உண்மையான, நிலையான பெருமை இருக்க முடியும்.



அதிலும், அடிப்படைத் தேவைகளைப் பெறும் முயற்சியிலேயே அநீதிக்கு அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறபோது, யார் அடிப்படைத் தேவைகளையும் கூட இழந்திடுவேன், இன்னலை ஏற்பேன், வாழ்வதற்காக நீதியை இழந்திட மாட்டேன் என்று கூறுகிறானோ கூறியபடி செயல் படுகிறானோ, அவனே எல்லாப் பெருமைக்கும் உரியவனாகிறான்.

தம்பி! நமதுசெவிகளிலே விழுகிறதல்லவா பெரிய இடத்தைப் பிடித்துக்[ கொண்டவர்களைப் பற்றிய புகழுரை; அவற்றிலே மிகப்பெரும் அளவு வெற்றுரையே; அல்லது பலன்பெற விழைந்து செய்யப்படும் அர்ச்சனையேயாகும்.

அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா! தன்னலம் துளியும் அற்றவர்! தன் குடும்பம், தன் குழந்தைகள் இதைப்பெறவேண்டும் அதைப்பெறவேண்டும் என்று அலைபவர் அல்ல, குடும்பம் அல்ல அவருடைய கண் முன் தெரிவது; நாடு, மக்கள்; அத்தகைய தியாகி அவர் என்று ஒருவரைப் பற்றிப் புகழ் சொரிவது எப்போது பொருளுள்ள பேச்சாக முடியும்? அவருக்குக் குடும்பம் இருந்து, அதனைக் காத்திடவும் ஏற்றம் பெறச் செய்திடவும் அவர் தமது முழுநேரத்தையும் நினைப்பையும், ஆற்றலையும் வாய்ப்புகளையும் பயன் படுத்திக் கொண்டிருந்துவிடும் போக்கிலே செல்லாமல், தன் குடும்பம் நாட்டு மக்கள் சமுதாயத்திலே ஒரு அங்கம் என்ற அளவிலே கருதி, பொதுநலனைப் புறக் கணிக்காமல் தமது பணியினை நடாத்திச் செல்லும்போது; குடும்பத்திடம் இயற்கையாக ஏற்படும் பாசத்துக்கு முழுகக முழுக்கக் கட்டுப்பட்டுவிடாமல், சமுதாயததை மனதிலே கொண்டு பணியாற்றும்போது; தன் குடும்ப நலனை மட்டுமே கவனித்துக் கொண்டு பிறர் நலனைப் பேணிடத் தவறாமல், பொது நலனுக்காக உழைத்திடும்போது அவ்விதமின்றி, குழந்தை குட்டிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் போக்கு கொண்டவரல்ல அவா; எப்போதும் பொதுத் தொண்டிலே நாட்டம் காட்டுபவர் என்று ஒருவரைக் குறித்துப் புகழ்ந்துவிட்டு அவருக்கு எத்தனைக் குழந்தைகள்? என்று கேட்கும்போது, அவருக்குத் திருமணமே ஆகவில்லையே!! என்று பதிலளிததால், தயாகி என்றும், தன்னலம் மறுத்தவர் என்றும் புகழ்ந்து பேசியது என்ன பொருளைத் தரும்?

> அவர் தன் குழந்தைகளைக் கவனிப்பதிலேயே காலத்தைத் தள்ளிவிடவில்லை! ஏனென்றால, அவருக்குக் குழந்தைகளே இல்லை!! ஏனென்றால் அவருக்குததிருமணமே ஆகவில்லை!!

இந்த நிலையிலே அவரைப் புகழ்ந்து பேசுவதிலே பொருளோ பொருத்தமோ எப்படி இருக்கமுடியும்!

> அவருடன் நீச்சல் போட்டியிலே எவனும் வெற்றிகாண முடியாது; ஆனால் அவருக்கு நீச்சலே தெரியாது.

> அவள் மலரைத்தொட்டுத் தன் கொண்டையில் செருகிக்கொளளவேமாட்டாள்; ஏனெனில் அவள தலை மொட்டை.

> அவன் பசும்பாலே சாப்பிடமாட்டான்; ஏனெனில் அவன் இருக்கும் இடததில் உளளவை அவ்வளவும் எருமைகள்!

> அவன் எந்த அழகியையும் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான; ஏனெனில் அவன பிறவிக்குருடன்!

தம்பி! இந்த வரிசையிலேதான் சேர்க்கவேண்டும், திருமணம் செய்துகொள்ளாத ஒருவரைப்பற்றிப் பேசும்போது அவர் தமது குழந்தை குட்டிகளின் நலனுக்காகப் பாடுபடுபவர் அல்ல என்று புகழ்வது! இல்லை, ஆகவே தேவை இல்லை! குழந்தைகள் இருந்து, அவை காகூவெனக்கூவி, அவைகளுக்காகப் பாடுபடாமல், நாட்டுத் தொண்டுக்கே என் நேரம் முழுவதும் என்று கூறிச் செயலாற்றினவரா? இல்லையே! குழந்தைகள் இல்லை, ஆகவே குழந்தைகளைக் கவனிப்பதா; சமுதாயத்தைக் கவனிப்பதா என்ற சிக்கல் எழவே காரணம் இல்லை.

> என்றாலும் புகழ்கிறார்களே! ஏன்? மகிழச் செய்திடலாம் என்ற எண்ணம், அந்த எண்ணம் எழக்காரணம்? ஏதாவது கிடைக்காதா என்ற ஆசைதான்!

தம்பி! தன்னலத்துக்கும் பொதுநலனுக்கும் இடையிலே சிக்கி, தத்தளித்து இறுதியில் பொதுநலனுக்காகத் தன்னலத்தை இழந்திட உறுதிகொள்பவனே, மனிதன்!

நிறம் கருப்பு என்றபோதிலும், குடிஅரசுத் தலைவர் நிலை என்றபோதிலும், நான் ஓர் மனிதன் என்பதை எத்தனையோ இடர்ப்பாடுகள் இடித்தபோதும் கலங்காது எடுத்துக்காட்டினாரே டக்ளஸ்டில்மன், அவருக்கு மற்றோர் 'மனிதன்' துணை நிற்க முன்வருகிறான்.

ஓர் வழக்கறிஞன்; டில்மனுக்கு நெடுநாளைய நண்பன்; வெள்ளை இனம்; ஆனாலும் தூய உள்ளம்.

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. • திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'
மற்றும்
'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

திறமைமிக்க வழக்கறிஞர்! ஆனால் வருவாய் அதிகம் இல்லை; காரணம் அவர் ஏழை எளியோருக்காகவே பணிபுரிந்துவந்தவர்.

குடும்பம் இல்லாதவர் அல்ல! வாழத் தெரியாதவரும் அல்ல. வாழ்ந்திடவேண்டிய அவசியமே அற்றவரும் அல்ல. ஒண்டிக்கட்டை அல்ல! நான் எதற்காகவும் எவரிடமும் தயவுகேட்கத் தேவையில்லை; நாலு முழத்துண்டு போதும் இடுப்புக்கு; நாளைக்கு ஒருவேளை சோறு போதும்; படுத்து உறங்க எந்தத் தெருத் திண்ணை கிடைத்தாலும் போதும் என்று 'வக்கணை' பேச!

தன்னையொத்த வழக்கறிஞர்கள், தன்னிலும் திறமைக் குறைவானவர்கள் பொருள் திரட்டி, தனவானாகி, கனவானாகி, மாளிகையிலே வாழ்ந்திடக் காணும் போதுகூட, நாம் ஏன் பணம் திரட்டக்கூடாது என்ற எண்ணம் கொள்ளவில்லை.

"உழைப்பு அதிகம்! இதயம் பலகீனமாக இருக்கிறது. இதே அளவிலும் வேகத்திலும் வேலைசெய்துகொண்டிருந்தால், நல்லதல்ல! ஆபத்தாகிடக்கூடும்.

மருத்துவர் கூறுகிறார் இதுபோல. இது கேட்ட தன் மனைவியின் கண்களைக் காண்கிறார்! சோகம் கப்பிக் கொண்டிருக்கிறது. ஆகவே ஒரு புதுமுடிவுக்கு வருகிறார். நல்ல வருவாய் தரத்தக்க முறையில் சில ஆண்டுகள் தன் 'தொழிலை' அமைத்து நடத்தி, பிறகு ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும்! சிற்றூரில் ஒரு வசதியான வீடு அமைத்துக்கொண்டு, இயற்கைச் சூழ்நிலையில் தமது முதுமையைக் கழித்திடவேண்டும் என்று விரும்புகிறார். இந்த எண்ணத்தை, அனுமதிக்கப்பட முடியாத தன்னலம் என்றோ பொறுத்துக்கொள்ளக் கூடாத கெடு நினைப்பு என்றோ பேதையும் கூறிடான்.

நாலுமுழத் துண்டுபோதும் என்று 'தன்னலமற்றவர்'பேசுகிறாரே, அவருக்குநாளைக்கு மூன்றுவேளை குளியல்! ஒவ்வொரு குளிப்பாட்டுக்குப் பிறகும் புதிதாக வெளுக்கப்பட்ட ஆடை! என்றால், அவர் நாலுமுழத்துண்டு போதும் என்று பேசியது, தன்னலமற்ற தன்மையா அல்லது ஏழையைத் தடவிக் கொடுக்கும் தந்திரமா என்பதுபற்றிய விளக்கமா கூறவேண்டும்!

பெரியதோர் மாளிகையில், திண்டுமீது சாய்ந்தபடி பேசலாம், எனக்கென்னய்யா? படுத்துத்தூங்கத் தெருத்திண்ணை போதும்! என்று. தந்திரப்பேச்சன்றி வேறென்னவாக அது இருக்கமுடியும்.

கடினமாகப் பல ஆண்டுகள் ஏழைகளுக்காக உழைத்தான பிறகு, மேலும் அது போலவே உழைத்துக் கொண்டிருக்க உடல் இடம்தராது என்று மருத்துவர் எச்சரிக்கை தந்தான பிறகு, வாழ்க்கையை இனிச் சற்று நிம்மதியாக நடத்திச் செல்ல வழி தேடிக் கொள்ள வேண்டும் என்ற நிலையினைக் கொள்வது— 'தன்னலம்' என்று இழிவாகக் கூறப்பட வேண்டியதாகிவிடுமா! பேதையும் அங்ஙனம் கூறிடக் கூசுவான்.

ஒரு வாய்ப்பும் தன்னாலே வந்தது, அந்த வழக்கறிஞருக்கு.

செல்வாக்கு மிக்க ஒரு வணிக நிறுவனம், குறிப்பிட்ட சில ஆண்டுகள், சட்ட ஆலோசகராக இருக்க அழைத்தது. ஊதியம் அதிக அளவில்! கட்டு திட்டங்கள் குறைவு, கண்ணியமாக நடத்துவார்கள்! இந்த வணிக அமைப்புடன் ஒப்பந்தம் செய்துகொண்டு சில ஆண்டுகள் வேலை பார்த்தால், பிறகு பலப் பல ஆண்டுகள் இன்னலற்ற வாழ்க்கை நடத்திச் செல்வதற்கு ஏற்ற பொருள் கிடைத்துவிடும். சிங்காரச் சிற்றூர்! வயல் வெளி! இயற்கை அழகு! ஓய்வு தரும் மகிழ்ச்சி!

வழக்கறிஞர் இசைவு தருகிறார்; துணைவியார் மெத்தவும் மகிழ்ச்சி கொள்கிறார்கள்; வணிக அமைப்பின் பொறுப்பாளர் வேலை சம்பந்தமான ஒப்பந்தம் தயாரித்துத் தருகிறார்; படித்துப் பார்க்கிறார் வழக்கறிஞர்! திருப்தியாகவே இருக்கிறது! கையொப்பமிட முனைகிறார்; தொலைபேசி மணி அடிக்கிறது.

இன்ப நிகழ்ச்சிகள் காண்கிறாள் வழக்கறிஞரின் மனைவி. வணிகக்கோட்டத்துப் பொறுப்பாளன், விழா நடத்த விரும்புகிறான்; உயர்தரமான உணவு விடுதியில்! இனி அவர் உடலுக்கு ஆபத்தின்றி வாழ்க்கை நடத்தலாம்; நிம்மதி பெறலாம் என்பதிலே அவளுக்கு மகிழ்ச்சி. சிற்றூரும் சிங்காரச் சிற்றிலும் மனக்கண்ணால் காணுகின்றாள்; இதழ்களில் புன்னகை தவழ்கிறது.

கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகிறார் வழக்கறிஞர்.

என்ன! என்ன! தொலைபேசியில் யார்? என்ன திடுக்கிடத்தக்க செய்தி? ஏன் இந்தக் கலக்கம்?


தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

# ஜெயா பார்மஸி

## ஆயுர்வேத வைத்தியசாலை

**H. O.** பெரியகுளம்

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

**ஆஸவங்களும் அரிஷ்டங்களும்**

விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.
போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:—எங்கள் பார்மஸி சர்க்காரால் (**Recognised by Central Board of Indigenous Medicine Madras.**) அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொள்க:
உரிமையாளர்: **J. M.** ராஜன்
ஜெயா பார்மஸி
6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.
PHONE: 348, 348-A, 438

## இந்தவாரம் இந்த நாட்டில்...

**ராமேசுவரம், ஏப். 1**—தலைமன்னாருக்கும், ராமேசுவரத்திற்கும் இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்தை முதலமைச்சர் பக்தவத்சலம் தொடங்கிவைத்தார். வாரம் இருமுறை இப் போக்குவரத்து நடைபெறும்.

**குர்காவோன், ஏப். 1**—நாட்டின் உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்கும் ஒரு நடவடிக்கையாக மக்கள் 5 ஆண்டுகளுக்குக் குழந்தைகள் பெறக் கூடாது என்றார் மத்திய அமைச்சர் சுசீலா நய்யார்.

**புதுடில்லி, ஏப். 2**—மீண்டும் மணிவுக்காரி உற்பத்தி செய்வதுபற்றிய திட்டம் விரைவில் மந்திரி சபைக்குப் போகும் என்றார் டி. சஞ்சீவையா.

**புதுடில்லி, ஏப். 2**—2, 3-வது திட்டக் காலத்தில் வெளி நாடுகளுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடனுக்காக, உடனடியாக ரூ. 3,450 கோடி வெளிநாடுகளின் கடன் தேவை என இந்தியா அறிவித்துள்ளது.

**பம்பாய், ஏப். 3**—நகராட்சி மன்றங்களில், அரசியல் கட்சிகளுக்கே இடமில்லை என்று மதிதிய அமைச்சர் எஸ். கே. பாட்டில் தெரிவித்தார்.

**திருச்சி, ஏப், 4**—பாலிடெக்னிக் வகுப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள், கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களில் 100 மதிப்பெண்கள் பெற்றாகவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

**புதுடில்லி, ஏப். 4**—பொதுத் தேர்தலுக்கு முன்னர் விரைவிலேயே பஞ்சாபி சுபா, ஹரியானா ஆகிய புது மாநிலங்கள் அமைக்கப்பட்டுவிடும் என்று நந்தா தெரிவித்தார்.

**புதுடில்லி, ஏப் 4**—பெரிய பாசனத் திட்டங்கள் பெரும்பாலும், போதிய அளவு பூர்வாங்க ஏற்பாடுகளின்றியே நிறைவேற்றப்பட்டுள்ளதன் விளைவாக, திட்ட அமைப்புக்களிலும், செலவு மதிப்பீடுகளிலும் புதிய பல மாறுதல்கள் செய்ய நேர்ந்துள்ளது என்று அறிக்கை ஒன்று கூறுகிறது.

**சென்னை, ஏப். 4**—மாநிலத்தில் உள்ள எல்லா போர்டு செகண்டரி பள்ளிகளையும் ஏப்ரல் முதல்நாள் முதல், அரசாங்கம் மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**புதுடில்லி, ஏப். 5**-உத்தியோகத்திற்காக விண்ணப்பிக்கப்படும் மனுக்களில், இந்தியில் கையெழுத்திடப்படாமையால் பல நிராகரிக்கப்பட்டுள்ளனவென்று மக்களவையில் எதிர்க் கட்சியினரால் புகார் கூறப்பட்டுள்ளது.

**புதுடில்லி, ஏப். 6**—அரசியல் அமைப்புச் சட்டத்தில் கோரம் பற்றிய விதியை மாற்றியமைக்க ஒரு மசோதா கொண்டுவரப்படும் எனத் தெரிகிறது.

**நாகபுரி, ஏப். 6**—பட்டப் பரீட்சைக்கான வினாத் தாள் ஒன்றை நாகபுரி இதழ் வெளியிட்டு, "இதுதானா இன்றைய கேள்வி?" எனக் கேட்டிருக்கிறது. இதன் மூலம் வினாத்தாள்கள் வெளியாதல்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

யார் பேசினார்கள் தொலைபேசி மூலம்.

என் நண்பர்! டக்ளஸ் டில்மன்! குடி அரசுத் தலைவர்.

என்ன சொல்கிறார் உங்கள் நண்பர்?

அவர்மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்களல்லவா......

ஆமாம்! பயங்கரமான குற்றச்சாட்டுகள். கடினமான வழக்கு.

அந்த வழக்கில், அவர் சார்பாக வாதாட அழைக்கிறார், என்னை; நம்பிக்கையுடன்; நட்பு உரிமையுடன்......

என்ன! என்ன! டில்மனுக்காக நீர் வாதாடுவதாகன்றாய் இருக்கிறது வேடிக்கை. வேடிக்கைகூட அல்ல; இது விபரீதம். நமது கம்பெனி, டில்மன் வீழ்த்தப்பட வேண்டும் இந்த வழக்கின் மூலம் என்று விரும்புகிறது; திட்டமிட்டிருக்கிறது; அதற்காகப் பணம் செலவிடவும் முனைந்திருக்கிறது.

நான் உமது வணிகக் கோட்டத்திலே பணிபுரிய ஒப்பந்தம் செய்துகொள்வது என்றால், என் இச்சையாக வேறு வழக்குகளைக் கவனிக்கக்கூடாதா? அப்படி ஒரு நிபந்தனையா......

எந்த வழக்கையும் கவனிக்கலாம், இந்த வழக்கைத் தவிர! டில்மன் ஆட்சியில இருப்பது எமது கம்பெனிக்கு இடையூறாக இருக்கிறது.

குடிஅரசுத் தலைவருக்காக வாதாட எத்தனையோ வழக்கறிஞர்கள் கிடைப்பார்களே......

கிடைப்பார்கள்...ஆனால் அவர் என்னை அழைக்கிறார்; நம்பிக்கையுடன்; நான் மறுக்க மாட்டேன் என்ற நம்பிக்கையுடன்......

மறுக்கத்தான் வேண்டும்....உம்மையே டில்மனுக்கு எதிராக வாதாடச் செய்திட விரும்பினோம். நண்பர் என்கிறீர். ஆகவே வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதானால, டில்மனுக்காக வாதாடக்கூடாது.........

ஒப்பந்தம் நமக்கு நிரம்பச் சாதகமானது என்பதை மறவாதீர். உமது துணைவியாக உள்ள நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்; இத்தனை ஆண்டுகள் உழைத்தது போதும்; இனிக் குடும்பத்தைச் சற்று கவனித்திட வேண்டுகிறேன். மருத்துவர் கூறினதை மறந்திடலாமா.........உங்கள் நண்பர் புரிந்துகொள்வார் நிலைமையை...... கூறிவிடுங்கள் வேறு ஒருவரை வழக்கை நடத்தச் சொல்லி......

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதானால், இந்த நிபந்தனையை மறவாதீர்; டில்மனுக்காக வாதாடக்கூடாது......

கையொப்பமிட்டால்தானே, நிபந்தனை

.........

அப்படியானுல் எமது கம்பெனி அழைப்பை மறுத்துவிடப்போகிறீரா......

வேண்டாம்......வேண்டாம்.........என் பேச்சைக் கேளுங்கள். குடும்பத்தை நாசமாக்காதீர்கள். மனைவி என்ற உரிமையுடன் உங்கள் நலனில் அக்கறைகொண்டவள் என்ற முறையில், உம்மைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்......

ஒப்பந்தத்திலே கையெழுத்திடும் ஐயா! ஏன் ஓராயிரம் யோசனை. உம்மாலும் முடியாது, உம்மைப்போன்ற பலர் கூடினுலும் முடியாது டில்மனைக் காப்பாற்ற......

நிலைமை மோசமாக இருப்பதால்தான், டில்மன் என்னை அழைத்திருக்கிருர்; புரிகிறது. நான் ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்யப்போவதில்லை.

வணிகக் கோட்டத்தானுக்குக் கடுங்கோபம். ஒப்பந்தத்தாளை மடித்து எடுத்துக்கொண்டு வெளியே செல்கிருன் கண்ணீர்ப் பொழிந்த நிலையில் துணைவி இருக்கிறள். ஒருபுறம் அவளுடைய கண்ணீர் தெரிகிறது! மற்ருேர்புறம் டில்மனுடைய குரல்! காதிலே விழுகிறது. மனக்கண்ணுல் பார்க்கும்போது ஒருபக்கம், மாளிகை, பைபையாகப் பணம், பளபளப்பான வாழ்க்கை, பொன்னகையும் புன்னகையும் துலங்கிடும் நிலையில் மனைவி; சிற்றூர்; சாலை; சோலை; இன்பச் சூழ்நிலை தெரிகிறது; மற்ருேர்புறமோ, துயரம் தோய்ந்த முகத்துடன் டில்மன்; அவன் கண்கள் அனுப்பும் அழைப்பு! நான் துரத்தப்படுகிறேன்! என்னை வேட்டையாடுகிருர்கள்—கருநிறம் என்பதால! பழிசுமத்துகிருர்கள் என்னைச் சூழ்ந்து நிற்கும் நிறவெறியர்! என் கண்களுக்கு ஒரே ஒரு நண்பன் தெரிகிருன்! அதனுல்தான் அழைக்கிறேன்; நம்பிக்கையுடன் என்று அந்தக்கண்கள் பேசுகின்றன.

தத்தளிக்கும் நிலையினளான அம்மாதரசி விழிநீரைத் துடைத்திடவும் மனமின்றி, எழுந்து செல்கிருள் வெளியே.........

எங்கே? இந்த நேரத்தில்? தனியாக! என்னிடம் சொல்லிக்கொள்ளாமல்!—அவன் கேட்கிருன்.

எங்கு என்ரு கேட்கிறீர்கள்—நெடுஞ்சாலை நோக்கிச் செல்கிறேன்; ஏதாவது ஒரு மோடார் கிடைக்காதா......விழுந்து செத்துத் தொலைக்கிறேன். அவள் கூறுகிருள், மனம் உடைந்த நிலையில்.

தம்பி! இது அல்லவா சிக்கல்! இது அல்லவா சோதனை! திருமணமே ஆகாத ஒரு திருவாளர், நான் என்ன என்பிள்ளை குட்டிகளுக்காகவா பாடுபடுகிறேன் எல்லாம் உங்களுககாகத்தானே என்று பேசுகிருரே, அந்த நிலைமையா இது!

ஒருபுறம் உள்ளம் உருகிக் கசிந்திடும் மனைவி.

மற்ருேர்புறம், திகைத்துக்கிடக்கும் நண்பன்.

மனைவியின் கண்ணீரையும் துச்சமென்று கருதிவிட முடியாது; அந்த மாதரசியும் அக்ரமம் ஏதனைச் செய்தாகிலும் எனக்குச் சுகபோக வாழ்வு அமைத்துக் கொடு என்று கேட்கவில்லை. நிம்மதியாக வாழக்கிடைத்திடும் ஒரே வாய்ப்பை இழந்துவிடவேண்டாம் என்றுதான் கெஞ்சுகிருள்.

## இந்த வாரம் வெளிநாட்டில்...



**வாஷிங்டன், ஏப்.1** — பிரதமர் இந்திராகாந்தி தன் அமெரிக்க விஜயத்தின்போது, ஒரு விருந்தில் 'நடனமாட இந்தியா எதிர்க்கும்' எனக் கூறி மறுத்துவிட்டார்.

**மாஸ்கோ. ஏப். 1** — டாஷ்கண்ட் உடன்பாட்டை பாகிஸ்தான் அலட்சியப்படுத்துவது வருந்தத்தக்கது என்று ருஷியா கவலை தெரிவித்தது. பாதுகாப்புக் கவுன்சிலுக்குக் காஷ்மீர் பிரச்சனை செல்லுமானுல், அது பயனற்றது என்றும் ரஷ்யாவின் ஆதரவு அதற்கில்லையென்றும் ரஷ்யா அறிவித்துள்ளது.

**நியூயார்க். ஏப் 1** —இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு அந்நிய நாடுகளின் தனியார் முதலீடுகள் பெருமளவில் அனுமதிக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் கூறினுர்.

**லண்டன் ஏப். 2**—இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், லேபர் கட்சிக்கு மிகப் பெரிய பெரும்பான்மை கிடைத்துள்ளது. வில்சனும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**நியூயார்க், ஏப் 2**—இந்திய மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க, அந்நிய நாடுகளின் உதவியையும் யோசனைகளையும் ஏற்பதாக இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

**லண்டன். ஏப். 3**—இந்தியாவின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுப்பதுபற்றி புதிய மந்திரிசபை பரிசீலிக்கும் என்று அரசாங்க அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

**நியூயார்க், ஏப், 3** — இந்தியாவில், நம்பிக்கையின்மை, பட்டினி, தேர்தல் கிளர்ச்சி-காரணமாக மீண்டும் பலாத்காரச் சம்பவங்கள் தலை எடுக்கும் அபாயம் உள்ளது என்று அமெரிக்க உளவு நிருபர் குழு தெரிவித்துள்ளது.

**மாஸ்கோ, ஏப் 4** — நாடுகளின் எல்லைகள் மீது உரிமைகள் பாராட்டி மாற்றியமைக்கும் கருத்துக்கள் கொண்டுள்ள சக்திகளுக்கு விட்டுக்கொடுக்கும் முயற்சி மிகவும் அபாயகரமானது என்று ரஷ்ய காங்கிரசின் மாநாட்டின்போது குரோமிகோ கூறினுர்.

**மாஸ்கோ, ஏப். 5**—லூனு 10 என்ற விண்வெளிக்கோள் ஒன்றை ரஷ்யா பறக்கவிட்டுள்ளது. இம் முயற்சி வெற்றிபெற்ருல், சந்திரமண்டலத்துக்கு மனிதன் செல்வது சாத்தியமாகிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**சிங்கப்பூர், ஏப். 6**— ஜாகர்தா பகுதியிலுள்ள எல்லா பள்ளிகளையும், அவற்றிற்குதவும் சீன ஸ்தாபனங்களையும் மூடிவிடும்படி ராணுவத்தலைவர் உத்திரவிட்டுள்ளார்.

**ஜாகர்தா, ஏப். 6** — ஆலோசனை காங்கிரஸ் மூலம், ஜனுதிபதி சுகர்னே மக்களுக்குப் பொறுப்புடையவராக இருக்கவேண்டும்; இதுவே அவரது அதிகாரம் என்று தளபதி சுகர்த்தோ கூறியுள்ளார்.

மனைவியின் வேண்டுகோளை மதித்திடுவதும், குடும்பத்திற்கு நிம்மதியான நிலையை அமைத்திடுவதும், ஒரு குடும்பத்தலைவன் மேற்கொண்டாகவேண்டிய கடமைகளிலே ஒன்று! அநீதியல்ல! அக்ரமம் அல்ல! பிறரைக் கெடுப்பது அல்ல!!

நண்பன் அழைப்பை ஏற்றுக்கொண்டால், அந்த நல்லவன் கண்களிலே ஒரு களிப்பு ஒளிவிடும்! மறுத்தால், அந்தக் கண்களிலே இரண்டொரு சொட்டு கண்ணீர் சிந்திடும்.

நண்பனுடைய கண்களிலே நம்பிக்கை ஒளி எழக்காண வேண்டுமானால், மனைவின் கண்ணீரைக் கண்டு கலங்கக் கூடாது.

மனைவியை மகிழச்செய்திடும் கடமையைக் காட்டிலும் நண்பனைக் காத்திடும் கடமை பெரிது.

குடும்பம் — தன்னை ஒட்டியது! நண்பன் பிரச்சினையோ, பொதுவானது!

தன்னலம் விரண்டோடிற்று; பொதுநல உணர்ச்சி வென்றது. வெளியே புறப்பட்ட மனைவியை டில்மன் தடுக்கக் கூட இல்லை.

தம்பி' இதனை ஒத்த சிக்கல் எழும்போது, தன்னலத்தைத் துறந்திடும் உறுதி பிறந்திடவேண்டும். இந்த நிகழ்ச்சியைத் திருப்பித் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டே இருக்க வேண்டும் போலத் தோன்றுகிறது.

குடும்ப நலனைப் பற்றிய கவலையை உதறித் தள்ளிவிட்டு கண்ணீர்ப் பொழியும் மனைவியின் மனம் நொந்து போகிறதே என்பது பற்றிய சங்கடத்தையும் தாங்கிக் கொண்டு, அந்த வழக்கறிஞர் டில்மனுக்காக வாதாடியேதீருவேன் என்று உறுதிகொண்டாரே, அது எவருடைய மனதிலே முளைத்திடும் தன்னல உணர்ச்சியையும் பொசுக்கிக் கருக்கி விடத் தக்கது. எவரும் வியந்து பாராட்டுவர் அந்த வழக்கறிஞர் மேற்கொண்ட தன்னல மறுப்பினை.

ஆனால் அவரே கண்டு வியந்து பாராட்டும் விதமாக, அமைகிறது அவருடைய துணைவியாரின்செயல். என்ன செயல்; அந்த மாதரசிதான் குடும்பத்தைக் கவனிக்கும்படி வற்புறுத்தினார்களே; வணிகக் கோட்டப் பணியை மேற்கொள்ளச் சொன்னார்களே, சிக்கலை ஏற்படுத்தினார்களே; அப்படிப்பட்ட செயலுக்காகவா பாராட்ட முடியும் என்று கேட்கிறாய்!

இல்லை, தம்பி! வெளியே சென்ற மாதரசி, ஒருமணி நேரம் கழித்த பிறகு வீடு திரும்பினார்கள்; திரும்பியதும், "கண்ணாளா! என்னை மன்னித்துவிடும்! டில்மனுக்காக வாதாடச் சம்மதம் தெரிவித்துவிடும்! எப்படியும் டில்மனைக் காப்பாற்றியாகவேண்டும்" என்றுகூறினார்கள் எதனால் ஏற்பட்டது இந்த விந்தையான மாறுதல் என்று கேட்கிறாய்.

எதனால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதுபற்றி, தம்பி! நீயேதான் சிறிதளவு சிந்தித்துப்பாரேன்; நடந்ததை நான் அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

## பதில் என்ன தோழா?

செங்கதிரின் ஒளிவீச்சில் இருள்பறந்து போகும்!
செந்தமிழின் இனிப்பினிலே துயர்மறைந்து போகும்!
பொங்கிவரும் கடற்காற்றில் புதியசுகம் தோன்றும்!
பொன்னியின்நீர் வரவினிலே வயல்விளையும்! நெஞ்சில்
தங்கிவரும் புதுநினைவு செயலானால் மக்கள்
தாங்கிவரும் துயர்களுக்கு முற்றுப் புள்ளி!
எங்கெங்கும் முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி
எப்போது?' எனும்கேள்வி! பதில்என்ன தோழா?

பழுக்கத்தான் வேண்டுமடா செங்காய்!நம் கொடியும்
பறக்கத்தான் வேண்டுமடா புதுப்புகழைப் பெற்று!
முழுக்கத்தான் நாம்உழைக்க வேண்டும்!ஏன் இன்னும்
முடக்கத்தான் துவையலைப்போல் கசக்கின்ற ஆட்சி?'
கலக்கத்தால்—கவலையினால் நம்நாட்டு மக்கள்
கழகத்தார் நமைநோக்கிக் கேட்கின்ற கேள்வி!
முழக்கத்தால் எழுந்தாலே புகழ்பெற்ற நாட்டின்
முதுகெலும்பே! திராவிடனே! பதில்என்ன தோழா?

சிங்கம்போல் நடிப்பதற்குத் தொடங்கும்நாய் இந்தி!
செந்தமிழோ நாமின்றேல் நாதியற்றுப் போகும்!
தங்கம்நீ! சிங்கம்நீ! தன்னுயிரைத் தந்து
தமிழ்காக்கும் முன்னேற்றக் கழகத்தின் நல்ல
அங்கம்நீ! அன்பன்நீ! நீபாடு பட்டால்
அகலாதா 'வரிப்புலி'கள் காட்டாட்சி? மக்கள்
எங்கெங்கும் கேட்கின்றார் நம்ஆட்சி பற்றி!
என்செய்யப் போகின்றாய்? பதில்என்ன தோழா?

—புலவர் பொன்னிவளவன்.

## நீதியின் குரல்!

சர்வதேச விவகாரங்களில் படை பல உபயோகத்தைத் தடுப்பது எப்படி என்பது இன்றுள்ள தலையாய பிரச்னைகளில் ஒன்றாகும். நீதித் துறை இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் பெரிதும் உதவலாம். நிலையான சட்டத்தின் ஆட்சியைக் கொண்டு வருவதன் மூலமும் நீதித் துறைக்கு முக்கியத்துவமும் பலமும் அளிப்பதன் மூலமும் மனித சமுதாய முன்னேற்றத்துக்கு வழிவகைகள் காணலாம்.

—அமெரிக்கத் தலைமை நீதிபதி
'ஏர்ல் வாரன்' கட்டுரையொன்றில்




பத்தொன்பதாம் பகுதி

## அந்த அறையில்!

சங்குச் சுண்ணத்தால், அந்த அறையின் சுவர்கள் பளிச்சென்று இருந்தன. அந்த வெள்ளித் தகட்டுச் சுவற்றிலே, பௌத்த திருமறை நூல்களிலிருந்து சில காட்சிகள் வண்ண ஓவியங்களாகத் தீட்டப் பட்டு, அகிம்சா தத்துவததைப் போதித்துக்கொண்டிருந்தன.

அந்தத் தத்துவத்தைத் தந்த அண்ணல் புத்தபிரானின் பளிங்குக் கற்சிலை ஒன்று, சிகப்புக் கல்லால் ஆன உயரமான பீடத்தின் மீது வைக்கப்பட்டிருந்தது.

புத்தர் சிலைக்குப் பக்கத்தில் — ஒரு ஓவியம் இருந்தது! அந்த ஓவியம்தான், காண்பதெல்லாம் கனவோ என்ற ஐயத்தை அவன் மனதில் எழச்செயதது! அந்த ஓவியம் வேறு யாருடையதுமல்ல, உத்தமன் பொன்னையாவினுடையது! அந்தப் பொன்னையாவின உருவ ஓவியம், மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

உணர்ச்சி வெள்ளத்தை நீந்தி அவன் மெள்ளக் கரையேறினுன். "பொன்னையா!" என்று முணுமுணுத்துக்கொண்டே, வாயிற்படியில் நின்றிருந்த செந்தாமரையைப் பார்க்க முகத்தைத் திருப்பினுன்.

அவள் அங்கே இல்லை! மூடிய கண்களோடு, அவள் புத்தர் சிலையின் முன்பு மண்டியிட்டிருந்தாள்!

'செந்தாமரை, என்னை மன்னித்துவிடு!' என்று சொல்லிக் கொண்டே, அவள் அருகே சென்றுன்.

வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து, இரண்டடி பின்னுக்கு நகர்ந்து கண்களில் கோபத்தை ஏற்றி நின்ருள்.

"நான் ஒரு அவசரக்காரன் என்றேன்! அத்துடன் ஆணவக்காரனும் என்ருய் நீ! அந்த இரண்டுமே சரியல்ல! உண்மையில் நான் ஒரு அறிவில்லாதவன் செந்தாமரை, அறிவில்லாதவன்!"

'செந்தாமரை யார் என்று தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?'

"மாசறும் பொற்பாவை–மாண்பு மிக்க மங்கையர் திலகம்—மாற்ருரைக் கருவறுக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட மறத் தமிழச்சி என்று தெரிந்து கொண்டேன்."

"சரி! இனி நீங்கள் போகலாம்!" என்று அவள் கடுகடுத்த முகத்தோடு சொல்லிவிட்டு, அந்த அறையினின்றும் வேளியேறினுள். அடுத்த அறையினுள் நுழைந்து, சோகத்தைத் தாளமுடியாமல் முகத்தைத் தலையணையில் புதைதத படியே கட்டிலில் சாய்ந்து, விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

"செந்தாமரை!"

"இந்த அறைக்கு ஏன் வந்தீர்—போய்விடுங்கள்!" என்று தலையணையிலிருந்து முகத்தை எடுக்காமலேயே கூறிவிட்டுத் தேம்பி அழலானுள்.

"செந்தாமரை, பத்தரை மாற்றுத் தங்கம் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், உன்னைப் படாதபாடு படுத்திய நீசன் நான்! குணக் குன்றைக் கொடுமைப்படுததிய சண்டாளன் நான! அறிவில்லாதவன என்று ஒத்துக்கொண்டேன்—அன்பே—என்னை மன்னித்துவிடு! விம்மும் உன் குரல், வாளாக என் இதயத்தை அறுக்கிறது, செந்தாமரை! அழாதே! அழாதே!" என்று உணர்சசி நிறைந்த குரலில் சொல்லிக் கொண்டே, அவளது கண்ணீரைத் துடைக்கச் சென்றவன—தொட்டால் சீறுவாளோ என்ற பயத்தினுல்—தயங்கி நின்று விட்டான்!

துன்பமும் துயரமும் இதயத்தைக் கசக்க — புயலை எதிர்த்துத் தள்ளாடி நிற்கும் நெடுமரம்போல—அவன் திகைத்து நின்றிருந்தான்.

அவனது பதைப்பையும் திகைப்பையும் கண்டு, செந்தாமரை மனதிற்குள்ளேயேசிரித்துக்கொண்டாள். வெறுப்பான பார்வையை அவன் பக்கம் செலுத்தினுள்.

"இன்னமும் எதற்காக மானமும் பண்பும் இழந்தவளின் வீட்டிலிருக்கிறீர்!" என்று ஆத்திரமும் அதிகாரமும் கலந்த குரலில் கேட்டு விட்டு, சேலையின் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, எழுந்து உட்கார்ந்தாள்.

"செந்தணலில் வெந்து சாம்பலாகக்கொண்டிருப்பவன் மீதா இந்தக் கோபப் பார்வையையும் கொடுமைச்சொல்லையும்வீசுகிருய்? விஷக் கன்னி என்று உன்னைத் தூற்றினேன்–அது விவேகமில்லாத பேச்சு என்று தெரிந்துகொண்டேன்!

நீ புதுமைப்பெண், புரட்சி மலர் என்ற உண்மையைக் கண்டு உள்ளம் தெளிந்தேன்! மன்னித்தேன் என்று ஒருமுறை சொல்லி, என் புண்பட்ட மனதிற்கு மருந்தூட்டு செந்தாமரை!

"என்ன காதல் நாடகம் ஆரம்பமாகிறதா?"

"மூடமதி கொண்டதினுல் முன்பு நாடகமாடினேன்! இப்பொழுது நான் உதட்டால் பேசவில்லை! உள்ளத்தின் அடித்தளத்திலிருக்கும் நாக்கை அசைத்துப்பேசுகிறேன்!"

"படமெடுத்தாடும் பாம்பு நான்! அது தெரியாமல, என் எதிரில் கூத்தாடிக் கத்தும் தவளையாகிறீர் தாங்கள்!"

"என் முட்டாள் தனத்தை அடிக்கடிக்குத்திககாட்டி என்னைச் சிததிரவதை செய்யாதே, செந்தாமரை!"

'பௌத்த, சமண மதத்தவரை—பகுத்தறிவுச் செம்மல்களை—வெட்டி வீழததி அவர்களின இரத்தத்தால், சிவலிங்கததிற்கு அபிஷேகம செய்யும் அந்தத தூமகேதுவின் அக்கிரமங்கள், நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வருகின்றன. என முன்னோர்கள் வளாதத பௌததமதத்தை, வேரோடு அழிக்கவே தூமகேது மதுரைக்கு வந்

திருக்கிருன். ஆகவே அவனை விரட்டியடித்துவிட்டுத திரும்பவும் பௌத்த நெறியை நாட்டிலே புகழ் மணக்கச் செய்யவேண்டும் என்ற புனித இலட்சியத்திற்காகவே, நான் உயிர் வாழ்கிறேன்!"

"அப்படிப் பௌத்தமதத்தை நிலைநாட்டவேண்டும் என்ற இலட்சியத்தைக்கொண்ட நீ — வள்ளிக் கூத்து ஆடுகிருயே — தகுமா அது?"

"வள்ளிக் கூத்து ஆடினுல்தானே, அரசருக்குரிய விழாக்களில் இடம்கிடைக்கும்! அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அரசாங்க அலுவல்களிலேயே, நெற்றியிலே திருநீறும் உள்ளத்திலே பௌத்தமும்கொண்ட சிலர்களோடு தொடர்புஏற்படுத்திக்கொள்ளலாம் — அதன்மூலம் இலட்சியத்தை ஈடேற்றிக்கொள்ளலாம் — என்ற திட்டத்தோடுதான் அப்படி ஆடி வருகிறேன்! வள்ளிக்கூத்து ஆட நான் பாசிப்பட்டினம் வராமலிருந்திருந்தால் நம் சந்திப்பு ஏற்பட்டிருக்குமா?" என்று நினைத்துப் பாருங்கள்!

"நீ இவ்வளவு நல்லவளாக இருப்பாய் என்று கனவில்கூட நினைதததில்லை, கண்ணே!"

"அன்பே என்றீர் — போகட்டும் என்றிருந்தேன்! இப்பொழுது கண்ணே என்று அழைப்பதின மூலம், ஒருபடிமேலே செல்கிறீர்—இதெல்லாம் என்ன தடுமாற்றம்?" என்று சிறிது வெறுப்பும் கோபமும் கலந்த குரலில் அவள் கேட்டாள்.

"உன்னை நான் புரிந்துகொண்டேன், செந்தாமரை!"

"உம் பேச்சை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை!"

"உண்மையாகவா?"

"இதென்ன பார்வை? இதென்ன அர்த்தமற்ற புன்னகை? நான் மகா கோபக்காரி! எச்சரிக்கையோடு இருஙகள்!"

"இந்தச் சோலையப்பனைப் பொறுத்தமட்டில், நீ அப்படி இருக்க மாட்டாய் என்பதை நான அறிவேன்! இல்லாவிட்டால் இநதக் கட்டிலறையினுள் காலடியெடுத்து



வைக்கவே என்னை அனுமதித்திருக்கமாட்டாயே!"

"என் பெருந்தன்மைக்குச் சிறுமை கற்பிக்காதீர்" என் சீற்றம் மிகும்! எதற்கு இந்த வீண்பேச்சு! உமக்குக் கோடிவணக்கம். இவ்விடத்தைவிட்டுச் சென்றுவிடுங்கள்!" என்று சொல்லியபடியே, கட்டிலைவிட்டுக் கீழே இறங்கி, வெறுப்போடு கைகூப்பி வணக்கம் செய்தாள்.

மேற்கொண்டு என்ன செய்வது, எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்பது புரியாமல் சோலையப்பன் திகைத்தான்.

பாசிப் பட்டினத்தில் சந்தித்த அன்றே, அவளது வேல்விழிகள் அவனது மனத்தில் ஏதோ ஒரு புதுச்சுவையைத் தூண்டிவிட்டதை அறிந்தான். படைத்தலைவர் ஆளவந்தாரின் மகன் எங்கே — பலர் முன்னிலையில் பல்லிளித்து ஆடிப் பிழைக்கும் இந்த நாட்டியக்காரி எங்கே—என்ற ஏற்றத்தாழ்வு கற்பித்து, பொங்கும் ஆசை வெள்ளத்திற்கு அணை போட முயற்சி செய்தான்.

மயானத்தில் கண்டபோது, அந்த மதிமுகவதி வீரம்பேசி, தூங்கிய காதலைத் தட்டி எழுப்பிவிட்டாள். தூமகேதுவின் ஒற்றர் குழுவில் கோமளவல்லிகளும் உள்ளனர் என்று இராமேசுவரத்தில் அறிவொளி அடிகள் கூறக்கேட்டதும, வலிய வலிய தன்னை வலம்வரும் செந்தாமரை நிச்சயம் வஞ்சகனின் கையாளே என்ற முடிவிற்கு வந்தான். தூமகேதுவைத் தொழுது வாழ்பவள் என்ற கோபத்தினுலும் வெறுப்பினுலும் உள்ளத்திலிருந்த காதல் உணர்ச்சி தலைதூக்க முடியாமல் ஏதோ ஒரு மூலையில் போய் பதுங்கிக்கொண்டது!

புத்தர் சிலைக்குப் பக்கத்தில் நண்பன் பொன்னையாவின் உருவச் சித்திரத்தைக் கண்டதும், அவள்மீது என்றுமே ஏற்படாத பெருமதிப்பு, அவனுக்கு ஏற்பட்டது. அதனுல் உள்ளத்தில் ஒளிந்திருந்த காதல், துள்ளிக் குதித்துக் கூத்தாடத் தொடங்கிவிட்டது. நாடி நரம்புகளை எல்லாம் கிடுகிடுக்கச் செய்யும் ஓர் உணர்ச்சி, அவன் இதயத்தில் கட்டுக்கடங்காமல பொங்கி வழிய ஆரம்பித்துவிட்டது. அந்த உணர்ச்சியிலே மிதக்கும் தோணியானுன் அவன்!

இதயத்தில் மடலவிழ்த்து மணம் பரப்பிய அந்த ஆசை மலரை—வார்த்தைகளாக்கி —கன்னியின் எதிரே தெளித்துக் காட்டினுன்.

தோள் பூரித்து நிற்பாள்-சித்தம் குளிர்விப்பாள்-என்று மனக்கோட்டைக் கட்டியதற்கு மாருக, அவள் சிடுசிடுப்பைக் காட்டிச் சீறி விழுந்தாள்.

"என்சிறுமதியினுல் சீற்றமடைந்திருக்கும் இவளை, எப்படிச் சிரித்துப் பேசும்படிச் செய்வது? அவள்கனல் மூச்சை, காதல் பேச்சாக மாற்ற வேண்டுமே—வழி என்ன?" என்ற ஏக்கம், அவனது உள்ளத்தில் புகுந்து கிழுகிழுத்தது.

"மணிமேகலைபோலப் பேசுகிருயே, செந்தாமரை!"

"இன்பத் தென்றல் வீசும் இரவு நேரத்திலே — ஆள் அரவமே இல்லாத சாலையோரத்திலே — தனித்திருக்கும் குமரிப்பெண்ணுன என்னிடமா, இந்தக் குறும்புப் பேச்சு? மணிமேகலை எனறு என்னைத் தூக்கிவைத்து, துரத்திவந்த சோழன் மகன் உதயகுமாரனுகப் பார்ககிறீரா?"

"வேண்டாம் செந்தாமரை! நீ மணிமேகலையுமாகவேண்டாம், நான் உதயகுமாரனுகி வித்யாதரனின் வாளால் வெட்டப்பட்டு விழவும் வேண்டாம்!"

"அப்படியானால் நான் மாதவி என்று வைத்துக்கொள்ளுங்களேன்!"

"மாதவியா? உன் இசைக்கும் நடனத்திற்கும் எதிரே அந்த மாதவி தோற்றல்லவா ஓடவேண்டும்!"

பொன்னையாவின் கல்லறைக்கு மலர்மாலை சூட்டிவிட்டுத் திரும்பிய அன்றிரவு சாலையில் அவர்கள் இருவருக்குமிடையே நடந்த இந்தப் பேச்சு—இப்பொழுது அவன் நினைவிற்கு வந்தது.

"மாதவி!" என்று மனதிற்குள்ளேயே ஒரு முறை சொல்லிப்பார்த்துக்கொண்டான்.

சட்டென்று தன் கையிலிருந்த ஓலை அவன் கவனத்திற்கு வந்தது! அதிலிருந்த முதற்கவிதையை முன்பு முணுமுணுத்தபோது—அதை எங்கோ படித்ததாகக் கவனமிருந்ததே ஒழிய — தெளிவாக இன்ன சுவடியில்தான் படித்தோம், என்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

இப்பொழுது மாதவி என்றபெயர் நினைவிற்கு வந்ததனால், அந்தக் கவிதையை எந்தக் காவியத்தில் வாசித்தான் என்பது அவனுக்குத் தெள்ளத் தெளிய விளங்கிவிட்டது.

ஆசையோடு செந்தாமரையை ஒரு முறை பார்த்துவிட்டு, அந்த ஓலையிலிருந்த மற்றொரு பாடலை உணர்ச்சியோடு உரத்த குரலில் படிக்கத் தொடங்கினான்.

பையுள் நோய் கூரப்
பகல் செய்வான் போய்வீழ
வையமோ கண் புதைப்ப
வந்தாய் மருள் மாலை
மாலை நீ யாயின்
மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந்தது
வாழி மாலை!'

'இந்தப் பாடலை இப்பொழுது படிக்கச் சொல்லி உம்மை யார் கேட்டது?'

'தேனைப் பருகு என்று யாராவது சொன்ன பிறகுதான் நாம் பருகுகிறோமா? இனிமையான இந்த இளங்கோவடிகளின் கவிதையைக் கண்ணால் கண்டால் போதாதா, நாக்கு நர்த்தனம் செய்ய!'

'ஏதோ எனக்குப் புரியாததைப் பேசுகிறீர்!'

'மரகதத்தால் ஆன மோதிரங்கள் அணிந்த மாதவியின் மலர்போன்ற மெல்லிய விரல்கள், யாழின் நரம்புகளைத் தடவியதால் எழுந்த இன்னிசைதானே உன் ஓலையிலுள்ள இந்த இரண்டு பாடல்களும்?'

'எனக்குத் தெரியாது!'

'எழுதியது நீதானே?'

'ஆமாம்! எப்பொழுதோ கேட்டவை—கொஞ்சம் நினைவு இருந்தது—சும்மா எழுதிப்பார்த்தேன்!'

"பாடல்களை மாதவி பாடிய தினால்தான் கோவலனை இழந்து, துன்பக்கேணியில் விழுந்தாள்! அதே பாடல்களை இந்தச் செந்தாமரை தீட்டிக்காட்டியதினால்தான் — இந்தச் சோலையப்பனை மயக்கி இன்பக்கேணியில் நீந்தி விளையாடப் போகிறாள்!"

'விளையாட்டிற்காக எழுதியதிலிருந்து, இவ்வளவு பெரிய விபரீதம் கோர சொரூபம் எடுக்கும் என்பது எனக்குத் தெரியாமல் போயிற்று!'

'இப்படி நான் சுவைத்து அனுபவிப்பேன் என்பது தெரிந்திருந்தால், இன்னும் இரண்டு பாடல்களை எழுதியிருப்பாய் என்று சொல்லேன்! எதற்காக இப்படி மனதில் தோன்றுவதை எல்லாம் மறைத்துப் பேச வேண்டும்? இளங்கோவடிகளின் கானல்வரி மங்கலமாகத் தொடங்குகிறது—சோகமாக முடிகிறது! நம்முடைய கானல்வரியோ, துன்பமாக ஆரம்பமாகி — இன்பமாகப் பூர்த்தியாகிறது!' என்று சிரித்துக்கொண்டே கூறி அவளது கரத்தைப் பிடித்தான்!

'விடுங்கள் அன்பே, வேலைக்காரி வருகிறாள்!' என்று பதைப்பும் பாசமும் நிறைந்த குரலில் அவள் கூறி கையை இழுத்துக்கொண்டாள்.

'இதோ ஒருநொடியில் வந்துவிட்டேன்!' என்று ஓர விழிகளால் சோலையப்பனைப் பார்த்துச் சொல்லிவிட்டுஅறைக்கு வெளியேநின்ற வேலைக்காரியின் அருகேஅவள் சென்றாள்.

'அவர் வந்திருக்கிறார் அம்மா!என்றுகாதோடு காதாக 'வேலைக்காரி கூறினாள்.

'யாரடி'தூமகேதுவா?'

'ஆமாம்!'

'சோலையப்பனோடு நான் பேசிக்கொண்டிருப்பதாகச் சொன்னாயல்லவா?'

'ஆமாம்!'

'சரி! நீபோய் அவரை அந்த அறையிலேயே இருக்கும்படிச் சொல்!'

வேலைக்காரியை அனுப்பிவிட்டு— அன்ன நடையோடும் உதட்டில் அலர்ந்த புன்னகையோடும் சோலையப்பனின் அருகே வந்தாள் செந்தாமரை.

'என்ன செய்தியாம்?'

'ஒன்றுமில்லை! மாடத்தெரு செல்லையாவின் மனைவி வந்திருக்கிறாளாம் என்னைப் பார்க்க! அதைச் சொல்லிவிட்டுப் போக வந்தாள்!........ அப்பொழுது நாம் நாளை திரும்பவும் சந்திக்கலாம் — சிலப்பதிகாரத்தை ஆராய்ச்சி செய்ய!

'நாளைய நம் சந்திப்பிற்குச் சிலப்பதிகாரம் தேவையில்லை கண்ணே, அகநானூறு அவசியம் வேண்டும்!'

'அப்படியா! என்ன செய்வது, உங்களுக்காக அதையும் படித்து வைக்கிறேன்!' என்று குறுநகையோடு கூறி அவனது மார்பைத் தடவிக் கொடுத்தாள்.

சோலையப்பன் அந்த வீட்டைவிட்டு வெளியேறி, சாலையில் நடந்து செல்வதை உப்பரிகையிலிருந்தபடியே அவள் பார்த்துக்கொண்டிருந்தாள், அவனது உருவம் மறைந்ததும், சிலப்பதிகாரமாம் மாதவியாம்! என்று கேலியோடு கெக்கலி கொட்டிச் சிரித்தபடி, தூமகேதுவைப் பார்க்க ஓடினாள்!

[வளரும்]



4-ம் பக்கத் தொடர்ச்சி

கொணர்ந்ததாக மட்டுமே கவிஞர் அங்குக் குறிக்கிருர். எததகைய வரலாற்றுக் காரணமும் இதற்குக் கவிஞரால் தரப்படவில்லை.

இதுபோலவே, சோழர் வரலாற்றில் இராசேந்திரனுடைய கல்வெட்டுக்கள் மூலம், அவன் இரண்டாண்டுகளில் இந்தியா முழுவதும் திக்குவிசயம் செய்து இமயம்வரை, தன் புகழைப் பரப்பியதையும், அடுதத இரண்டாண்டுகளில், அதுபோலவே கீழ்க்கடலில் கலம் செலுத்தி, பாமா, மலாயா, சுமத்ரா, சாவா, செலீபிஸ், போர்னியோ எங்கும் சென்று வெற்றி விருது நாட்டியதையும் கூறுகிறது. மலாசியாவெங்கும், இந்தோனேசியா வெங்கும் இதன் சின்னங்கள் உள்ளன. காவியத்தைப்போலவே கல்வெட்டுகளும் வெற்றி பாடுகின்றன—போர்க் காரணம் குறிப்பிடவில்லை.

தொல்காப்பியக் காலப் பாண்டியன், இப்போது சுமத்ரா தீவில் இருபபதாகக் கூறப்படும் சாலியூரைத் தலைமையிடமாகக்கொண்டு, அந்நாட்டில் தன் வெற்றிச் சின்னமாகக் கடல்நீர் தன் அடியலம்ப நின்று விழா வாற்றிய செய்தியும் சங்கப் பாடல்களில் கூறப்படுகிறது. இங்கும் வரலாற்றுக் காரணங்கள் கூறப்படவில்லை.

சோழன் இராசேந்திரனின் கீழ்க்கடல் போருககுக் காரணம், தமிழகத்துக்கும் மலாயாவுக்கும் அந்நாளில் உலகக் கடல் வாணிகத் துறையில் ஏற்பட்ட போட்டியே என்று வரலாற்ருசிரியர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் கூறியுள்ளார். ஆயிர ஆண்டுகளுக்கு முன் தமிழகமும், மலாயாவும் உலகின் பெரும் கடலாட்சி இனங்களாக இருந்த நிலைமையை இது நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

சேரன் கடலில், பிறகலம் செல்லாதவாறுபோல் என்று சேரரின் கடலாட்சி பற்றிச் சஙக காலப் பாடல்கள் பேசுகின்றன.

இது போன்ற ஒரு வரலாற்றுச் சூழ்நிலையே சஙக காலததில் தமிழரை இமய எல்லையை நாடச் செய்திருந்தன என்பதை அக்கால உலக வரலாறு நமக்குக் காட்டும்.

சேரன் செங்குட்டுவன் காலத்தில் வடதிசையில் அசோகனது மோரிய ஆட்சி கவிழ்ந்து, பல சின்னஞ் சிறு அரசுகள் ஒற்றுமையற்று நிலவின. இதனைப் பயன்படுத்திக் குசாணர், ஊணர் போன்ற நாகரிகமற்ற முரட்டு இனத்தவர், மேற்கிலிருந்து இந்தியாவைப் படையெடுத்தனர். அவர்களில் ஒருவனை கனிஷ்கன் (சிலபபதிகாரக்கனகன்) நடு ஆசியா, பஞ்சாப், ஆகிய பகுதிகளிலெல்லாம் பரந்த தன் ஆட்சியை நிலைநாட்டினுன். கங்கைக்கரை மீதும் அவன் தன் ஆட்சியைப் பரப்ப முனைந்து வந்தான்.

தென்னகத்தின் வடகோடியில் ஆண்ட அரசர்கள், ஆந்திர மரபினரான சதகாணிகள், (சிலம்பின் நூற்றுவர் கன்னர்) தாங்கள் வசப்படுத்தி ஆளவும், அதனுள் கனிஷ்கன் முனனேருமல் தடுக்கவும் விரும்பினர். இந்தத் தேசியப் பாதுகாப்பு முயற்சியில், பன்னூருண்டு போரிட்டு அலைக்கழிவுறற வடதிசைப் படைகளுக்கும் ஆந்திரப் படைகளுக்கும் உதவவே, செங்குட்டுவன் வடதிசைப் படையெடுப்புக்கள் நடைபெற்றன.

செங்குட்டுவன் வெற்றியின் பயனை, நாம் இந்திய வரலாற்றில் காண்கிருேம்.

இராசேந்திரன் வட திசைப் படையெடுப்புக்கும் இதுபோன்ற ஒரு வரலாற்றுச் சூழ்நிலையே காரணம்.

இராசேந்திரன் நாளிலும், வடதிசையில எத்தகைய வலிமையான அரசும் கிடையாது. கஜினியில் ஆண்ட மாமுது என்ற அரசன் காசி, கயா வரையில் தடுப்பாரில்லாமல் பதினெட்டுத் நடவை படையெடுத்து இந்தியா முழுவதையும் சூறையாடினுன். செங்குட்டுவன் நாளில், ஆந்திரர் தேசிய மானம் காக்க முனைந்தது போல, இப்போது வங்காளத்தை ஆண்ட மரபினரும், தம் முழுவலிமையையும் திரட்டி மாமுதை எதிர்க்க முற்பட்டனர். ஆனுல், இப்போதும் வடதிசைப் படைகள் அலைக்கழிவுற்று, வலிவிழந்து நின்றன. இராசேந்திரன், அவசர அவசரமாகத் தென் திசைப் படைகளுடன் வடதிசை சென்றுப் போரிட்டதன் காரணம் இதுவே.

இராசேந்திரன் வெற்றியின் பயனையும் நாம் இந்திய வரலாற்றில் காண்கிருேம், மாமுதின் படையெடுப்புகள் மதுரை (வடமதுரை)ப் போரோடு முற்றிலும் ஓய்ந்தன. அது மட்டுமன்று, அவன் மரபும் அவனுடன் ஒழிந்து, நூற்ருண்டுக் காலம், இந்தியாவின் வடமேற்கு எல்லையில் எவரும் காலடி எடுத்து வைக்க முடியாத நிலையேற்பட்டது.

இராசேந்திரனுடன் சென்ற—கன்னட நாட்டுச் சேனைத் தலைவன் வங்காளத்திலேயே தன் குடி, படைகளுடன் தங்கிபின்ஞட்களில் 'சேன' அரச மரபுக்கு முன்னேனுனுன். கன்னட மரபினரின் தடங்களை இன்றும் வங்காளத்தில் காண்கிருேம்.

இமய எல்லையின் முக்கியததுவத்தை நமக்குக் காட்ட, இவ்வாறு இந்தியாவின் இரண்டாயிர ஆண்டுக்கால வரலாறு, ஒரு கைகாட்டியாய் உதவுகிறது.

தமிழ்ச் சங்ககாலம் என்பது உலகில மூன்று பேரரசுகள் இந்திய நாகரிகத்துக்குப் பேரிடர் தரும் நிலையில் வளர்ந்துவந்த காலம் ஆகும். மேற்றிசையில் ரோமப் பேரரசு ஆசியா வரையிலும், பார்த்திபப் பேரரசு சிந்து ஆறு வரையிலும் வந்து இந்தியாவை நெருக்கிற்று. கீழ்த்திசையிலோ 'ஹான்' மரபினரின் கீழ் சீனு, இன்றைய செஞ்சீனுவைப் போலக் கீழை


## வாய்வு சூரணம்

**(Stomach Powder)**

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு—பித்த வாய்வு—இடுப்பு வாய்வு—இடுப்பு; கைகால் பிடிப்பு—அசரிக்கை—செரியாமை — வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை.)

**165 கிராம் (5 பலம்) டின் ரூ. 3-50**

-: தேவைக்கு எழுதவும் :-

**S. V. R. கண்டர் சன்ஸ்,**
வாய்வு சூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு
அரிசிப்பாளையம், சேலம்–9.

இடைக்குமிடங்கள்:

**தேஜ்பால் & கோ.**
91, நைனியப்ப நாய்க்கன் தெருவு,
சென்னை –3.

**இளங்கோ கிளீனிக்**
நெல்லித்தோப்பு,
வில்லியனூர் ரோடு, பாண்டிச்சேரி-5

**'சொக்கனுதம் செட்டியார்,**
நாட்டுமருந்துக் கடை-திருப்பாபுலியூர்,
கடலூர் N. T.

**ராஜா மெடிக்கல் ஹால்**
31, தர்மராஜா கோவில் தெரு,
பெங்களூர்–1. (கண்ட)

**E வல்லாராம்நாடார் & சன்ஸ்**
188-A. தாராவி ரோடு,
பம்பாய்–17.

**ஆத்மஜோதி நிலையம்**
நாவலப்பிட்டி, (சிலோன்)

**ஸ்ரீ கணபதி அண் கம்பெனி**
66, பெல்பீல்டு ஸ்டிரீட்,
ஈப்போ P.O. (மலேசியா)

ஆசியா முழுவதும் விழுங்கி இமயத்தில் கொடடமடிக்கத் தொடங்கி இருந்தது.

இது செங்குட்டுவனுக்குமுற்பட்ட காலமாகும்.

வடதிசையில் அப்போதும், வலிமையற்ற சிற்றரசரன்றி வேறு எவருமில்லை.

தமிழரசர் மூவரும் இந்தியாவின் மீது, சீனன் கை அணுகவொட்டாமல் காக்கவோ, ஒருவரை ஒருவர் தாக்குவதை விட்டுவிட்டு, அதே சமயம் புகழுக்காக ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டு இமயததில் சென்று புலி, கயல், வில் பொறிக்க முற்பட்டனர்.

தமிழர் இமயப்போரில், எதிரி சீனனே என்பதைக் கரிகாலன் வரலாறு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

இமயமலையை அணுகிய கரிகாலன் அதன் நெற்றியில் புலிக்குறி பொறித்தான். ஆனல் அப்போதும் இமயத்தின் இறுமாப்புத் தீரவில்லையாம்! அதன் திமிர் அடங்கும்படி கரிகாலன் தன் செண்டால் இமயத்தை அடித்து, அது பம்பரம் போல் சுற்றிவரச் செய்தானும்! அப்படிச் சுற்றி வந்தபோது, முன்பு நெற்றியிலிட்ட அதே புலிப் பொறிப்பை, அதன் பிடரியில்—அதாவது இமயத்தின் பின்புறமும் இட்டானும்!

புராணக் கதைபோல், இக்கதை காட்சியளிக்கிறது என்பதில் ஐயமில்லை.

ஆனல் இதைப் பாடியவர்கள் ஒட்டக் கூத்தர் போனற கற்பனைக் கவிச்சக்கரவர்த்திகள்.

பாடியவர்கள் காலமோ, இச்செயல் நடந்து, ஆயிர ஆண்டுகளுக்குப் பின்.

ஆயிர ஆண்டு சோழ மரபினர் சொல்லிவந்த கதை, பரம்பரை பரம்பரையாகச் சொல்லி வந்த விருதுகள், கல் வெட்டுக்கள் ஆகியவற்றின் ஆதாரங் கொண்டு அவர்கள் பாடினர்.

வரலாற்றுக் கண் கொண்டு பார்த்தால், இமயத்தில் தமிழர் தமிழ்க்கொடி பொறித்ததும் கீழ்க் கோடியில் பிலிப்பைன தீவுவரை சென்று கடலாட்சி எல்லை குறித்ததும், சீனர் கொடுமைகளிலிருந்து இந்திய நாகரிகத்தைப் பாதுகாக்கவே ஆகும், அந்நாளைய இந்திய நாகரிகத்திற்குத் தமிழர் வகுத்தவட எல்லை இமயம்—கீழ் எல்லை, இந்தோனேஷியாவின் வடகோடியிலுள்ள பிலிப்பைன் தீவு!

# கஞ்சனும்--கண்ணுடியும்!

அவன் ஓர் கஞ்சன்! எல்லாம் தனக்கே இருக்கவேண்டும் என்ற நினைப்பினன. பிற நடைய கஷ்டத்தைப்பற்றி துளியும் கவலைகொள்ள மாட்டான.

அவன் ஒரு நாள் தனக்கு வாலிபப் பருவத்தில் பழக்கமாகி இருந்த ஒருவரைப் பார்க்கச் சென்ருன்.

அந்த நண்பர் அறிவாளி அவர் எழுதிய ஏடுகள்பற்றி நாடு புகழ்ந்தது காதில் விழவே, கஞ்சன் அவரைக் காணச்சென்ருன் — இலவசமாக ஏதாவது புத்தகம் கொடுப்பார் என்ற எண்ணத்துடன்.

இருவரும் எதை எதையோ பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

விடைபெற்றுக்கொள்ளும்போது கஞ்சன், நல்ல அறிவுதரும் புத்தகம் கொடுங்களேன் எனக்கு என்று கேட்டான்.

உங்களைப்பற்றி அறிந்து கொள்ளவா? உலகத்தைப்பற்றி அறிந்து கொள்ளவா? எனறு கேட்டார் நண்பர்.

"உலகம் கிடக்கட்டும்! என்னைப் பற்றி அறிந்துகொள்ளத்தான் விருப்பம்" என்ருன் கஞ்சன்.

"அது வெகு எளிதாகமுடியுமே; புத்தகம் கூட வேண்டாமே. படிக்க வெகுநேரம் வீணுகக வேண்டுமே. என்று கூறிய நணபர்; தன் மாடி வெளிப்பகக தாழ்வாரத்தருகே கஞ்சனை அழைத்துச்சென்ருர், இந்த ஜன்னல் வழியாகப் பாருங்கள்; என்ன தெரிகிறது?" என்று கேட்டார். அது கண்ணுடி ஜன்னல்! அதன் வழியாக வெளியே பாாத்துவிட்டு கஞ்சன், "வெளியே மக்கள் தான் தெரிகிருர்கள்" என்ருன்.

"இதோ இப்படி வாரும்" என்று கஞ்சனை அந்த நணபன் உள் அறைப்பக்கம் அழைத்துச்சென்று, நிலககண்ணுடி எதிரே நிற்கச் செய்து, "இதிலே பாருங்கள்; என்ன தெரிகிறது" என்று கேட்டான்.

"இதிலேயா! இதிலே நான்தான் தெரிகிறேன்" என்ருன் கஞ்சன்.

"நீங்கள் பார்த்தது இரண்டும் கண்ணுடிதான்; அதிலே இந்தக் கண்ணுடியில் வெள்ளிக் கலவை பூசப்பட்டிருக்கிறது; ஆகவே உம்மைத தவிர வேறு எதுவும உமது கண்ணுக்குத் தெரியவில்லை. முதலில் பார்த்தீரே, அது 'ரசய' பூசப்படாத துல்லியமான கண்ணுடி; அதன் வழியாகப் பார்த்தபோது மக்கள் தெரிந்தார்கள் உம்கண்களுக்கு பணம் சேர்ந்துவிட்டால், அவர்களுக்கு உலகம் தெரியாது!" என்ருர் நண்பர். கஞ்சன வெட்கித் தலைகுனிந்தான்.


Tele: GRANDRESS Phone: 51716

நீடித்து உழைப்பிற்கும் நவ நாகரிக ரெடிமேட் ஆடைகளுக்கு சிறந்தது




கிராண்ட் டிரஸ்ஸஸ்

Manufacturers: GRAND DRESSES 160, ADAM SAHIB St, MADRAS-13

தென்னகம் முழுவதும் எல்லா கடைகளிலும் கிடைக்கும்

Baba Suits,
Jeen Suits,
Pyjama Suits,
Frocks,
Slacks,
Romper,
Ete, Etc.

தேவைக்கு வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்

# கேள்வி ? பதில்

(1) எதெற்கெடுத்தாலும் காமராசர் எதிர்க்கட்சிகளேயே குறை சொல்வதில் உள்நோக்கம் ஏதேனும் உண்டா?

எப்படியாவது இந்த நாட்டில் எதிர்க்கட்சிகளே இல்லாமற் செய்துவிட முடியாதா என்று தவியாய்த் தவிக்கிருர் காமராசர். சில இடங்களில் இவைகள் சில வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும், இதற்கு முக்கிய காரணம், எதிர்க்கட்சிகளின் குரலுக்கு ஆளும்கட்சி போதிய முககியததுவம் கொடுக்காததுடன், மிகுந்த அலட்சியப் போக்கும் காட்டுவதுதான் என்று கூறலாம். எப்படியாளுலும், அடுத்த ஆண்டில், காமராசர் மட்டுமல்லாது, ஆளும்கட்சிகூட இந்த 'குரலோசை'யில் பெரும் அளவு மாற்றம் காணவேண்டியிருககும் என்பதில் 'உள்நோக்கம்' எதுவும் இருப்பதற்கில்லை.

(2) மனச்சாட்சியை மனிதன் மறந்துவிடுவது எதனுல் என்று சொலலுங்கள் பார்க்கலாம்!

ஒன்று, 'மனிதன்' என்பதற்கான இலககணததனகீழ் வராததன் காரணமாக இருக்கலாம்; அல்லது நீண்ட நெடுங்காலமாக காஙகிரஸ் ஆட்சியில் பண்பட்டுவிட்டதனுலும இருக்கலாம்.

(3) வாஷிங்டனில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி, நடனமாட முடியாது என்று மறுத்துவிட்டது இந்தியாவுக்குப் பெருமைதானே!

சந்தேகமில்லாமல் பெருமைதான்! ஆனுல், அதற்காக அவர் கூறியுள்ள காரணங்களைப் பரிசீலித்தால்தான் வேதனையாக இருக்கிறது. 'இந்திய மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்-விரும்ப மாட்டார்கள், என்றல்லவா சொல்லி இருக்கிருர்! 'இந்திரா அம்மையார் விரும்பவில்லை' என்று சொல்லப்படவில்லையே! நியூயார்க் நகரத்தின் தத்துப் பெண்ணுக விரும்பும் அவரால், 'நான் விரும்பவில்லை' என்று எப்படிச் சொல்லமுடியும்?

(4) அண்மையில் நடைபெற்ற ராஜ்ய, மத்திய அரசுகளுக்கான மேலவை உறுப்பினர்களின் தேர்தல் எதைக் காட்டுகிறது?

கடந்த ஆண்டைவிட காங்கிரஸ் தன் உறுப்பினர்களில் பதினேருபேரை இழந்துவிட்டது என்பதற்காக, விசாரணை மேற்கொள்ளப்போகும் காங்கிரஸ் தலைமை, வரப்போகும் தேர்தலில் எப்படி நடந்துகொள்ளப்போகிறது என்பதை மக்கள் உடனடியாக உணர்ந்து கொண்டாக வேண்டும் என்று காட்டுகிறது.

(5) எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் உணவுப் பிரச்னையை ஒரே இரவில் தீர்ததுவிட முடியாது என்று பேசி இருக்கிருரே காமராசர்!

இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் ஏற்படுத்திவைத்திருக்கும் நிலையை—ஊழலை—குழப்பத்தை—பஞ்சத்தை— அவலத்தை—இரவோடிரவாக எவராலும் தீர்க்க முடியாதுதான் எனறு "மெயில்" ஏடு எழுதியுள்ள தலையங்கம் உம்மிடமிருந்தால், தமிழ்ப்படுத்தி அனுப்பி வையும் காமராசருககு!

(6) உணவு விவகாரம் ஒரு தேசியப்பிரச்னை என்கிருர்களே அதன் பொருள் என்ன?

ஒரு குறிப்பிடட பகுதிக்கு அல்லது விவகாரத்திற்கு என்று இல்லாமல், நாடு முழுவதற்குமாக உள்ள ஒரு பிரசனைககுத்தான் தேசியப் பிரச்னை எனறு பெயர். இந்த நாடுமுழுவதையும் இப்போது ஆண்டுகொண்டிருப்பது காங்கிரஸ்தானே! அதனுலதான் நாடுமுழுதும் உணவுப் பிரச்னை பரவலாகத் தலைதூககி நிற்கிறது. கேரளா, மேற்கு வங்கம் என்று மட்டுமல்லாமல், இது இந்தியா முழுவதுக்குமான ஒரு விவகாரம் என்கிருர்கள். அதாவது, இந்தியா முழுவதும் "உணவுப் பஞ்சம்" இருக்கிறது என்று அழகான வார்த்தை கொண்டு, அலங்காரம் செய்கிருர்கள். அவ்வளவுதான்!

●

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்ற பாடததை கடந்த திங்கள் ராவல்பிண்டியில் நடந்த சீன தளவாட அணிவகுப்பு உணர்ததியுள்ளது.

வாஷிங்டனும் மாஸ்கோவும் மட்டுமே இதுவரை பாகிஸ்தானத்தைத் தங்கள் தங்கள் அரசியல் தேவைகளுககேற்றவாறு பார்த்தும் பயன்படுததியுமவநதன. இப்போது புதியதாக சீனுவும சேர்ந்துகொணடிருக்கிறது.

இதனுல காஷ்மீர்ப் பிரச்னையின் முடிவு தள்ளிப்போகலாம் எனபது மடடுமலல; இப பிரசனையில சிக்கல்கள், பிற சகதிகளின் ஈடுபாடுகள் மேலும் தீவ்ரமாகியுள்ளன.

உள்நாட்டு அடிப்படையில் கூற வேணடுமானுல இநதிய அரசின வ்ழிபபு, கவனம, திறமை ஆகியன இனி கண இமைககும நேரம தவறுமானுலும் அது வெளிநாடடுக கொளகைககு ஏறபட்ட தோலவியாக மட்டுமலல; நாட்டுக்கே பெரிதாக வளர்ந்துவிட்ட பேராபததாக முடியும்.

—யாரோ.

## விற்பனையாளர் தேவை

எமது "காஞ்சி" வார இதழை விற்பனை செயய கீழ்க்கணட ஊாகளுககு விறபனையாளர்கள் தேவை.

நாச்சியார்கோயில்
பாலககாடு
கோததகரி
திருததணி
திருநினறவூர்
ஆதணடாாகொல்லை
வேதாரண்யம்

விவரங்களுக்கு

உரிமையாளர், 'காஞ்சி'
சின்ன காஞ்சிபுரம்.

சின்ன காஞ்சபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல்